ஓம் சரவணஜோதியே நமோ நம

**ஆசான் அரங்கமகா ஞானியரின் அருளாசி நூலிலிருந்து**
**தைப்பூச விழாவில் தொடர் தினங்களாக உயர்தொண்டு ஆற்றுகின்ற**
**தொண்டர் பெருமக்களுக்கு ஊக்கம் தருகின்ற வண்ணமும்**
**இந்த தொண்டிலே எந்த சூழலிலும் இடர்தாரா வண்ணம் பாதுகாக்கும் வண்ணமும்**
**மகான் ஆறுமுக அரங்கமகானின் பாதுகாப்பு அறிவுரை ஆசி நூல்**

01.02.2026

1. அருள் காட்டும் அப்பனவர் அடிகள் போற்றி
அறிவிப்பேன் அரங்கன்யான்
பாதுகாப்பு அறிவுரை ஆசி
வரமென ஓங்கார குடிலின்

2. விசுவாவசு ஆண்டு தைப்பூச விழாவில்
உயர்வாக தொடர் தினங்களாக
தொண்டாற்றி வருகின்ற தொண்டர் பெருமக்கட்கு
அரங்கன் யான் அவர்களுள் இருந்து

3. சக்தியாய் ஆக்கமும் மனபலம் தேகபலம்
அனைத்தும் தந்து காத்தருள் புரிவேன்
தொண்டர் பெருமக்கள் அச்சமற
தொடர் தினங்களாக அயராது சேவையாற்றிய

4. தொண்டர் பெருமக்களின் மனங்களிலும்
அவர்களுடைய தொண்டுகளிலும் அரங்கன் யான்
நிரம்பி பேரருள் தருகின்றேன்
அச்சமற இந்த தொண்டர் பெருமக்கள்

5. வாய்த்தது அரங்கன் எமக்கு
பெரும் பாக்கியமாகும் இவர்கட்கெல்லாம்
அரங்கன் யான் எண்ணுகின்ற
எல்லா வரத்தையும் படிப்படியாய் தந்து

6. காத்தருள் புரிவேன் தொண்டும் சிறப்பு
நிர்வகிக்கும் என் தொண்டர் பெருமக்களின்
சேவையும் சிறப்பு அன்னதனால் இவர்கட்கு
எக்கணமும் எந்த இடையூறும்

7. சோர்வும் தேக்கமும் பொருளாதார வகையிலும்
குடும்ப சூழல் வகையிலும்
சங்கடங்கள் வாராவண்ணம்
பாதுகாத்து வழிநடத்தி

8. கடைகாலமும் வரம் தந்து
அரங்கன் யான் அவர்களோடு உடனிருப்பேன்
அன்னதனால் இந்த தொண்டுக்கோ
அரங்கன் எந்தனின் உயர்வான சேவைக்கோ

9. அரங்கன் கூடாரத்துக்குள்ளேயே இருந்து கொண்டு
என்ன செய்யலாம் எதிர்ப்பு செய்வோமா
உயர்தொண்டர்களுக்குள் குழப்பம் செய்வோமா
என கருத்து முரண்பாடு கேளிக்கைகள்

10. இந்த தொண்டின் மேல்
அலட்சியங்கள் கொண்டவர்கட்கு
ஓங்காரக்குடிலில் இருப்பதற்கு இடமில்லை
அவர்கள் எல்லாம் தன்னைத்தானே

11. சரி செய்து கொள்ள வேண்டும்
அவ்வாறு ஒரு சூழல்
அமையவில்லை எனில் அவர்களெல்லாம்
ஓங்காரக்குடிலின் நிழலை கூட

12. தொடமுடியா வண்ணம் அகற்றப்படுவர்
அவர்கட்கெல்லாம் அரங்கன் தர்மத்துக்கு
எதிரான செயல் புரிகின்றார்கள் என்று
நிந்தனை செய்யும் நிலைகள் உண்டாகும்

13. அன்னதனால் இது அன்பர்கட்கு
தருகின்ற கடைசி வாய்ப்பு
அன்னதனால் தொண்டுக்கு எந்த சூழலிலும்
பங்கமோ தொண்டினுடைய அருமை பெருமை

14. தெரியாத வண்ணம் அலட்சியமோ
ஓங்காரக்குடிலின் மேலோ நிர்வாகத்தின் மேலோ
பங்கமான செயல்முறைகள் ரகசியமாய் செய்தாலும்
அரங்கன் என் பார்வையை விட்டு

15. அவர்கள் அகல முடியாது
அன்னதனால் இனிவரும் காலம்
அமைதி கொண்டு மனம் திருந்தி
வந்த நோக்கம் என்ன என்று உணர்ந்து

16. அரங்கன் என் தொண்டில்
அமைதிபட உண்மைபட விசுவாசம்பட

பணிவோடு சேவையாற்றினால் அவர்கட்கு
மீண்டும் ஒரு வாய்ப்பு தரப்படும்

17. அரங்கன் யான் இது எச்சரிக்கையாகவும்
என்பால் வந்து இணைந்தவர்கள்
அவர்களும் கடைத்தேற வேண்டும்
என்கின்ற கருணையோடும்

18. இந்த பாதுகாப்பு அறிவுரை
ஆசிதன்னை அருளுகின்றேன்
அனைத்தும் சித்திக்க அரங்கன் என்பால்
முழு சரணாகதி கொள்ள வேண்டும்

19. அவர்கட்கே இங்கு கடைகாலமும்
சேவைக்கும் கடைத்தேற்றத்துக்கும்
உண்டான வாய்ப்பும் கிட்டும்
அரங்கன்யான் அருளிய ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி